## இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
## வெள்ளிக் கிழமை பிரசங்கம்
**15 ஜூலை 2016 / 10 ஷவ்வால் 1437**

## <u>”ஹிக்மத்” தின் முதல் தூண் கல்வியறிவாகும்</u>

اَلْحَمْدُ للهِ الْغَنِيِّ الْحَمِيْدِ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللّٰهُ وَحْدَهُ لاَ
شَرِيْكَ لَه وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً
عَبْدُه وَرَسُوْلُه الْمَبْعُوثُ بِالرَّحْمَةِ وَالْقَوْلِ السَّدِيْد، اَللّٰهُمَّ صَلِّ
عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِه وَصَحْبِه وَسَلِّمْ تَسْلِيْماً كَثِيْرًا.
أَمَّا بَعْدُ،فَيَا عِبَادَ اللّٰهِ اتَّقُوْا اللّٰهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ
مُسْلِمُوْنَ.

ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான உச்சகட்டமான ”தக்வா” (பக்தியால்) நமது உள்ளங்களை நிரப்புவோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளையும் நிறைவேற்றுவோமாக! அவன் தடுத்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்தும் தவிர்ந்து கொள்வோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா அவனது மன்னிப்பை நமக்கு வழங்குவானாக! ஆமீன்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

கடந்த வாரப் பிரசங்கத்தில் ”ஹிக்மத்” (விவேகத்தைப்) பற்றி விவாதிக்கப்பட்டது. இன்று, இன்ஷாஅல்லாஹ், ”ஹிக்மத்” துடைய மற்ற சில அம்சங்களைப் பற்றி விவாதிக்க இருக்கின்றோம்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

முஸ்லிமாகப் பிறந்து, முஸ்லிம் குடும்பத்தில் முஸ்லிமாக வளர்ந்த ஒரு பதின்ம வயதுப் பிள்ளை, இறைவன் இருக்கின்றான் என்பதில் சந்தேகம் கொண்டால் அல்லது தொழுகை போன்ற வணக்க வழிபாட்டுச் செயல்களை நிறைவேற்ற மறுத்தால், அப்பிள்ளையிடம் எப்படி அணுகுவீர்கள்? அப்பிள்ளைக்கு நேர்வழி காட்டி, உதவி அப்பிள்ளையை நேர்வழிக்குக் கொண்டு வருவதில் உங்களின் அணுகுமுறை என்னவாக இருக்கும்?

ஒருவர், மற்றவர்களுக்கு உபதேசம் செய்ய முயற்சிக்கும் போது, முதலில் அவர் கல்வியறிவுமிக்கவராக இருக்க வேண்டுமென்பதை நம்மில் எவராலும் மறுக்க இயலாது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுடைய பாதையின் பால் மற்றவர்களுக்கு ”ஹிக்மத்” தாக (விவேகத்துடன்) வழிகாட்ட விரும்புபவர், கல்வியறிவால் தன்னை தயார் செய்து கொண்டவராக இருக்க வேண்டும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

قُلْ هَٰذِهِۦ سَبِيلِىٓ أَدْعُوٓا۟ إِلَى ٱللَّهِ ۚ عَلَىٰ بَصِيرَةٍ أَنَا۠ وَمَنِ ٱتَّبَعَنِى ۖ وَسُبْحَٰنَ

ٱللَّهِ وَمَآ أَنَا۠ مِنَ ٱلْمُشْرِكِينَ ﴿١٠٨﴾

பொருள்: (நபியே!) நீர் சொல்வீராக! “இதுவே என்னுடைய (நேரிய) வழியாகும்; நான் அல்லாஹ்வின் பால் (உங்களை) அழைக்கின்றேன்; நானும் என்னைப் பின்பற்றியவர்களும் தெளிவான ஞானத்தின் மீதே இருக்கின்றோம்; அல்லாஹ் மிகத் தூய்மையானவன்; ஆகவே, அவனுக்கு இணைவைப்போரில் நானும் ஒருவனல்லன்.” (அத்தியாயம்: யூசுப், வசனம்:108)

இமாம் இப்னு கஸீர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் கருத்தின் பிரகாரம், தற்போது உங்கள் முன் ஓதிக் காண்பிக்கப்பட்ட வசனமாகிறது, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களால் கடைப்பிடிக்கப்பட்ட அணுகுமுறையை நமக்குப் போதிக்கின்றது. ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மற்றவர்களை அல்லாஹ்வின் பாதையின் பால் அழைக்கும் போது, பொது அறிவுக்கும் இஸ்லாமிய ஷரீஅத்துக்கும் உகந்த ஆதாரங்களை முன் வைப்பவர்களாக இருந்தார்கள். இதனை மற்றொரு வார்த்தையில்: ”ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் அணுகுமுறை ”இல்ம்” (கல்வியறிவை) அடிப்படையாகக் கொண்டிருந்தது” எனவும் கூறலாம்.

மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் நவின்ற பின்வரும் சம்பவத்தை இங்கு நாம் சிந்தித்துப் பார்ப்போமாக!

பனீ இஸ்ராயீல் சமூக மக்களில் ஒருவர் 99 கொலைகளைச் செய்திருந்தார். அவர் தனது பாவங்களை நினைத்து வருந்தி, அதிலிருந்து திருந்த வேண்டுமென்ற நோக்கில் ஒரு துறவியை அணுகி : எனக்கு பாவமன்னிப்பு கிடைக்குமா? எனக் கேட்டார். அந்தத் துறவி "இல்லை" எனக் கூறிய போது, அந்தத் துறவியையும் அவர் கொலை செய்து விட்டார். பின்பு மற்றொரு நபரிடம் சென்று அவ்வாறே கேள்வி கேட்டார். அவர்: "ஆம்! உமக்குப் பாவமன்னிப்பு உண்டு; எனினும், பாவமன்னிப்பு பெறுவதற்காக பக்கத்திலுள்ள கிராமத்திற்குச் செல்வீராக!" என்று கூறினார். அவ்வாறே, அந்தக் கொலைக்காரர் அந்த கிராமத்திற்குச் சென்றுக் கொண்டிருந்தார். ஆனால், அவருக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்த தலைவிதியின் படி இடையிலேயே அவருக்கு மரணம் சம்பவிக்கும் நிலை ஏற்பட்டு விட்டது. மரணப்படுக்கையில் கிடந்தார்.

ரசூலுல்லாஹி(ஸல்) மேற்கொண்டு கூறினார்கள்: இந்த நிகழ்ச்சியை முன்னிட்டு, அவரது உயிரை வாங்கும் விஷயத்தில் கிருபையின் வானவருக்கும், "அதாப்" (நோவினை) தரும் வானவருக்கும் மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அப்போது, அல்லாஹ், பாவமன்னிப்பைத் தேடி அவர் சென்றுக் கொண்டிருந்த கிராமத்தின் பக்கமாக நகர்ந்து, நெருங்கிச் செல்லுமாறும், அவர் பாவம் செய்த இடத்திலிருந்து விலகிச் செல்லுமாறும் பூமிக்குக் கட்டளையிட்டான். பின்பு, இரண்டின் தூரத்தையும் அளந்துப் பார்த்து, யார் அவரது உயிரை வாங்க வேண்டுமெனத் தீர்மானித்துக் கொள்ள வேண்டுமென அந்த இரு வானவர்களுக்கு

அல்லாஹ் கட்டளையிட்டான். அவர் அந்த கிராமத்தை நோக்கி நெருங்கிச் சென்ற தூரம் அதிகமாக இருந்ததால் அவர் மன்னிப்பு வழங்கப்பட்டார். கிருபையின் வானவர் அவரது உயிரை மிகவும் எளிதாகக் கைப்பற்றினார்.

ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட வரலாற்றிலிருந்து பெறப்படும் முக்கியப் பாடங்களில் ஒன்று, மற்றவர்களுக்கு வழிகாட்ட விரும்புபவர்கள் கல்வியறிவைப் பெற்றிருப்பது அவசியமாகும் என்பதாகும். நம்மிடம் போதுமான கல்வியறிவு இல்லாத நிலையில் மற்றவர்களுக்கு வழிகாட்ட முற்பட்டால், நமக்கும் மற்றவர்களுக்கும் எதிர் விளைவுகளையே அது ஏற்படுத்தும். தற்போது உங்களிடம் பகிர்ந்து கொள்ளப்பட்ட வரலாற்றில் கவனம் செலுத்துங்கள்! அந்தத் துறவி தவறான பதிலைக் கூறியதன் காரணமாக, அந்தக் கொலைக்காராருக்கு மற்றொரு கொலையைச் செய்யும் நிலை ஏற்பட்டது. அந்தத் துறவியும் தனது உயிரை இழந்தார். எனவே, ஒருவர் தவறான பதிலைக் கொடுத்தால் பாவமன்னிப்புத் தேட முயற்சிப்பவருக்கு அதற்கான வாய்ப்பு கிடைக்காமல் போகலாம். மேற்கொண்டு அவர், அல்லாஹ் மற்றும் அவனது வழிகாட்டுதலை விட்டும் தூரமாகி விடலாம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேற்கண்ட சம்பவத்திலிருந்து பெறப்படும் இரண்டாவது பாடம் யாதெனில், வழிகாட்டுதலைப் பெற விரும்புபவர் கல்வியறிவுமிக்க அனுபவசாலியை அணுக வேண்டும் என்பதாகும். சரியான வழிகாட்டுதலைப் பெறுவதற்கும்,

உண்மையான வழி காட்டப்படுவதற்கும் அவர் கல்வியறிவுமிக்க நபரை அணுகுவது அவசியமாகும்.

ஒரு நோயாளி, அனுபவமிக்க மருத்துவரின் உதவியை நாடுவது அவசியமாகும் என்பது போல், திருக்குர்ஆன் வசனங்களைப் பற்றிய கேள்விகளைக் கேட்க விரும்புபவர், ஹதீது அல்லது ”ஃபிக்ஹ்” எனப்படும் இஸ்லாமிய சட்ட விளக்கங்களின் பொருளைத் தெரிந்து கொள்ள முற்படுபவர், தப்சீர், ஹதீத், ஃபிக்ஹ் போன்ற கல்விகளில் திறன்மிக்கவர்களை அணுக வேண்டும். ஒவ்வொரு துறையிலும் திறன்மிக்கவர்கள் இருக்கின்றார்கள். அவர்களின் திறன்களுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَمَآ أَرۡسَلۡنَا مِن قَبۡلِكَ إِلَّا رِجَالٗا نُّوحِيٓ إِلَيۡهِمۡۖ فَسۡـَٔلُوٓاْ أَهۡلَ ٱلذِّكۡرِ إِن كُنتُمۡ لَا تَعۡلَمُونَ ٤٣

பொருள்: (நபியே!) இன்னும் உமக்கு முன்னர் வஹீ கொடுத்து நாம் அவர்களிடம் அனுப்பி வைத்த தூதர்கள் எல்லோரும் ஆடவரே தவிர வேறல்லர்; ஆகவே (அவர்களை நோக்கி) “நீங்கள் (இதனை) அறிந்து கொள்ளாமலிருந்தால். (முந்திய) வேத ஞானம் பெற்றோரிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்” (என்று கூறுவீராக). (அத்தியாயம்: அந்நஹ்ல், வசனம்:43)

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

அல்லாஹ்வின் பாதையின் பால் மற்றவர்களுக்கு வழிகாட்ட, கல்வியறிவு அவசியம் என ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். இமாம் சுஃப்யான் அத்தவ்ரீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நவின்றுள்ளார்கள்:

ஒருவரிடம் மூன்று சிறப்பியல்புகள் காணப்படாத வரை, நன்மை செய்யுமாறு அல்லது தீமையிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு அவர் மற்றவர்க்கு அழைப்பு விடுக்க முடியாது. **முதலாவதாக**, நன்மை செய்யுமாறு ஏவும் போதும், தீமையைத் தடுக்கும் போதும் அவரிடம் மென்மையானப் போக்கு காணப்பட வேண்டும். **இரண்டாவதாக**, நன்மை செய்யுமாறு ஏவும் போதும், தீமையைத் தடுக்கும் போதும் அவர் நீதமாக நடந்து கொள்வது அவசியமாகும். **மூன்றாவதாக**, மற்றவர்களை நன்மை செய்யுமாறு ஏவும் போது அதற்கான கல்வியறிவு அவரிடம் காணப்பட வேண்டும். அவ்வாறே, மற்றவர்களைத் தீமையிலிருந்து தடுக்கும் போதும் அதற்கான கல்வியறிவு அவரிடம் காணப்படுவது அவசியமாகும்.

மற்றவர்களைக் கண்டிக்கும் போது, அதற்கான கல்வியறிவு அவசியமென நபி(ஸல்) அவர்களின் தோழர்களாகிய ஸஹாபாக்களும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். உதாரணமாக, கலீஃபா அலீ பின் அபீ தாலிப் (ரலி) அவர்களின் வரலாற்றை ஆய்வு செய்து பார்த்தால் "கவாரிஜிய்யா" க்கள் எனப்படும் குழப்பவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட சவால்களை எதிர்கொள்வது தான் அவர்களின் முக்கியச் சவாலாக இருந்துள்ளதைக் காணலாம். அவர்களைச் சமாளிப்பதற்காக, அவர்களைச் சந்தித்து, அவர்களுடன்

விவாதத்தில் ஈடுபடுமாறு இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களை கலீ஫ா அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

வரலாற்று அறிஞர் டாக்டர் அலி முஹம்மது அஸ்-ஸல஫ீ கூறுகிறார்கள்:

”இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களுக்கும் ”கவாரிஜிய்யா” க்களுக்கும் மத்தியில் நடைபெற்ற விவாதத்தில் நாம் பல பாடங்களைப் பெற முடியும். அதில் ஒன்று. ஒருவர் மற்றவருடன் விவாதத்தில் அல்லது சம்பாஷனையில் ஈடுபடும் போது, அவர் கல்வியறிவு மற்றும் தகவல்களை மட்டும் பெற்றிருந்தால் போதுமாகாது, மாறாக, அத்துடன், தனது வாதங்களை ”ஹிக்மத்” எனப்படும் விவேகத்துடன் எடுத்து வைக்கும் ஆற்றலையும் பெற்றிருப்பது அவசியமாகும்”

கலீ஫ா அலீ பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள், ”கவாரிஜிய்யா” க்களுடன் விவாதம் செய்வதற்கு இப்னு அப்பாஸ் (ரலி) யைத் தேர்ந்தெடுத்தற்குக் காரணம், இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் திருக்குர்ஆன் விரிவுரையில் திறன் மிக்க நபித் தோழர்களில் ஒருவராக இருந்ததாகும். இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், தனது கல்வியறிவு, உறுதியான நிலை, விவாதம் செய்வதில் அறிவுப்பூர்வமான அணுகுமுறை போன்றவற்றுடன் ”கவாரிஜிய்யா” க்களைச் சந்தித்ததால், அல்ஹம்துலில்லாஹ்! (எல்லாப் புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே உரித்தாகுக!) சுமார் 2000 ”கவாரிஜிய்யா” க்கள் நேர்வழியின் பால் திரும்பினார்கள். அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்).

எனவே, நம்மிடம் மார்க்கம் சம்பந்தமான சில கல்வியறிவுகள் காணப்படலாம்; அல்லது மார்க்க சம்பந்தமான குறிப்பிட்ட விஷயத்தை

நாம் அறிந்தவர்களாக இருக்கலாம். எனினும், தகவல்களை மற்றவர்களுக்குத் தெரிவிக்கும் போது நாம் அறிவுப்பூர்வமானவர்களாகவும், புத்திசாலிகளாகவும் இருப்பது அவசியமாகும். உதாரணமாக, இந்த ஷவ்வால் மாதத்தில் உறவினர்களை நாம் சந்திக்கச் செல்லும் போது, அவர்களின் வீடுகளில் காணப்படும் சில விஷயங்கள் நமக்கு சங்கடத்தைத் தருவதாக இருக்கலாம். நாம் காணுகின்ற விஷயம் சம்பந்தமான மார்க்க சட்டத்தையும் நாம் அறிந்தவர்களாக இருக்கலாம். எனினும், அவ்விஷயத்தை அவர்களின் சிந்தனைக்குக் கொண்டு வருவதற்கு சரியான நேரம் மற்றும் காலத்தைத் தேர்வு செய்வது அவசியமாகும். குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களுக்கு மத்தியில் நாம் ஒருவரைக் கண்டிப்பது நியாயமாகுமா? அவ்வாறு செய்தால் அந்த நபருக்கு தர்மசங்கடமான நிலை ஏற்படுமல்லவா? நாம் அவருக்குச் சொல்ல விரும்பும் கருத்து, ஆலோசனை வீணாகி விடலாமல்லவா?

எனவே, சன்மார்க்கத்தைப் பரப்பும் போது, ”தீன்” (மார்க்கம்) பற்றி தகவல்களைத் தெரிவிக்கும் போது ”ஹிக்மத்” (விவேகத்தைக்) கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

நமக்குப் பலனுள்ள கல்வியறிவையும், நாம் வாழும் காலமெல்லாம் கல்வியறிவைத் தேட வேண்டுமென்பதில் தீர்மானமான எண்ணத்தையும் ஆற்றலையும் வழங்குமாறு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடம் வேண்டிக் கொள்வோமாக! நாம் பெற்ற கல்வியறிவை அடிப்படையாகக் கொண்டு நற்காரியங்களைச் செய்வதற்கு நமக்கு எளிதாக்க

வேண்டுமென்றும் அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.